செய்தி வெளியீடு எண் : 964 நாள் : 19.05.2023

**பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்றத்தின் மறைந்த மாமன்ற உறுப்பினர்கள் இருவரின் குடும்பத்தினருக்கு குடும்ப பாதுகாப்பு நிதியாக தலா ரூ.3 இலட்சத்திற்கான காசோலையினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் இன்று (19.05.2023) வழங்கினார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் திருமதி. ஷீபா வாசு (வார்டு 122), திரு.நாஞ்சில் ஈஸ்வர பிரசாத் (வார்டு 165) ஆகியோர் மறைவினையொட்டி அவர்களது குடும்ப பாதுகாப்பு நிதியாக தலா ரூபாய் 3 இலட்சத்திற்கான காசோலையினை அவர்களது குடும்பத்தினரிடம் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் தலைமைச் செயலகத்தில் இன்று (19.05.2023) வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள உறுப்பினர்கள் மறைவிற்கு குடும்ப நிவாரண நிதியாக ரூபாய் ஒரு இலட்சம் வழங்கி வந்த நிலையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் இந்த ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை அறிவிப்பில், பொறுப்பில் உள்ள மாமன்ற உறுப்பினர்கள் மரணமடைந்தால், அவர்களது குடும்பத்திற்கு வழங்கப்படும் நிவாரண நிதி ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மறைந்த திருமதி. ஷீபா வாசு, திரு.நாஞ்சில் ஈஸ்வர பிரசாத் ஆகிய இரண்டு மாமன்ற உறுப்பினர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூபாய் 3 இலட்சம் குடும்ப பாதுகாப்பு நிதிக்கான காசோலைகள் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர் மரு.ஜெ.இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், மாமன்ற ஆளும் கட்சித் தலைவர் திரு.ஆர்.இராமலிங்கம், மாமன்ற செயலாளர் திரு.மகேஷ் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in